**வாசிக்க**: **தானியேல்** 10:1-21

**நீ ஜெபிக்கும்போது வானமண்டலத்தில் நடப்பது என்ன தெரியுமா**...?

தரியு ராஜா அரசாண்ட காலத்தில் தானியேல் தேவனுடைய பாதத்தில் 21 நாள் அமர்ந்து தன் தேசத்துக்காகவும், தன் ஜனங்களுக்காகவும், தேவாலயம் புதுப்பிக்கப்படவும் உபவாசித்து மன்றாடி ஜெபித்து கொண்டிருந்தான். அப்போது

தரிசனமுண்டாகி ஒரு தேவதூதன் தோன்றி பிரியமான புருஷனாகிய தானியேலே, நான் இப்போது உன்னிடத்திற்கு அனுப்பப்பட்டு வந்தேன். நான் சொல்வதை பயப்படாமல் கவனமாக கேள். நீ அறிவை அடைகிறதற்கும், உன்னை உன்னுடைய தேவனுக்கு முன்பாகச் சிறுமைப்படுத்துகிறதற்கும், உன் மனதைச் செலுத்தின முதல்நாள் துவக்கி உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது. பெர்சியா ராஜ்யத்தின் அதிபதி (ஆளுகை செய்யும் சாத்தானின் தூதன்) இருபத்தொரு நாள்மட்டும் என்னோடு எதிர்த்து நின்றான். ஆனாலும் பிரதான அதிபதிகளில் ஒருவனாகிய மிகாவேல் எனக்கு உதவியாக வந்தான். பிரியமான புருஷனே, பயப்படாதே, உனக்குச் சமாதானமுண்டாவதாக, திடங்கொள் என்றான். அப்பொழுது அவன்: நான் உன்னிடத்திற்கு வந்த காரணம் இன்னதென்று உனக்குத் தெரியுமா? இப்போது நான் பெர்சியாவின் பிரபுவோடே யுத்தம்பண்ணத் திரும்பிப் போகிறேன். நான் போனபின்பு, கிரேக்கு தேசத்தின் அதிபதி வருவான்.

சத்திய எழுத்திலே கண்டிருக்கிறதை நான் உனக்குத் தெரிவிப்பேன். உங்களுக்காக போரிட தேவனால் அனுப்பட்ட அதிபதியாகிய மிகாவேல் என்னோடேகூட சாத்தானின் தூதனை எதிர்கொள்ளுவார் என்று சொன்னான்.

**கேள்வி**:

தானியேல் ஜெபித்தபோது நடைபெற்ற இந்த நிகழ்ச்சிகள் எங்கே நடந்தது.? இந்த தூதன் யார்....?

**பதில்**:

தானியேல் ஜெபித்து கொண்டிருக்கும் போது தேவனால் அனுப்பபட்டவர் தேவசெய்திகளை கொண்டுவருகிற காபிரியேல் தூதனாவார். ஆனால் அந்த செய்தி தானியேலுக்கு வந்து சேராதபடி தடை செய்ய பெர்சியா பகுதியை ஆளுகின்ற பிசாசின் தூதன் தடைசெய்ய போராடினான். அப்போது தேவஜனங்களுக்காக

போராடும்படி தேவனால் நியமித்திருக்கிற தூதனான மீகாவேல் வந்து சாத்தானோடு போராடி காபிரியேலை தானியேலிடத்திற்கு அனுப்பி வைத்தார். இந்த நிகழ்ச்சி நம் ஆவிக்குரிய வாழ்வில் முன்னேற, விசுவாசத்தில் வளரவே ஆவியானவர் வேதத்தில் எழுதிவைத்துள்ளார். நீங்களும் நானும் ஜெபிக்கும் போது மாமிசகண்கள் காணும்படி எதுவும் நடைபெறுவதில்லை. ஆனால் நாமறியாத வானமண்டலத்தில் நமக்காக யுத்தம் செய்ய ஒரு தேவதூதர் சேனை உள்ளது. நமக்கு செய்தி கொண்டுவரும்படி ஒரு தேவ தூதர்சேனை உள்ளது. இவைகளை நம் மாமிச கண்கள் பார்க்காததால் நாம் சோர்ந்து போகிறோம். தானியேலை போல நாமும் உண்மையாக ஜெபித்து, நம்மை தாழ்த்தும்போது, நம் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படும். நீங்களும் தரிசனங்கள் காணலாம்.

நான் அநேகம் தரிசனங்களை அருளினேன், தீர்க்கதரிசிகளைக் கொண்டு உவமைகளால் பேசினேன். ஓசியா 12

**ஜெபம்**

பரிசுத்தமுள்ள தகப்பனே. ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை தடை செய்ய முனையும் பிசாசின் வல்லமையை இயேசுவின் நாமத்தினால் அழிப்பீராக. எங்களுடைய ஆவிக்குரிய கண்களும் திறப்பதாக. ஆமென்